**தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2020–2030 கொள்கை கட்டமைப்பை மதிப்பாய்வு செய்வதற்கு ஆலோசகர்களுக்கான அழைப்பு**

தேசிய கல்வி ஆணைக்குழு (NEC), தகுதிவாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கை பிரசைகளிடமிருந்து, ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பின் - 2020–2030 மதிப்பாய்வில் பங்கேற்பதற்கான விண்ணப்பங்களை கோருகின்றது. இலங்கை அரசு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின்படி, இலங்கை கல்வித் துறையின் தற்போதைய நிலை மற்றும் அரசாங்கத்தின் மூலோபாய வழிகாட்டுதலுடன் அதன் பொருத்தத்தையும் மற்றும் சீரமைப்பையும் உறுதி செய்வதற்காக, கட்டமைப்பின் விரிவான மதிப்பாய்வை தேசிய கல்வி ஆணைக்குழு நடத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. அதன்படி, இந்த முக்கியமான மதிப்பாய்வு செயல்முறைக்கு பங்களிப்புச் செய்வதற்காக தகுதியான மற்றும் அனுபவம் வாய்ந்த கல்வித் துறை ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளன.

---

**கட்டமைப்பின் விடயப்பரப்பு:**

தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு இலங்கை கல்வி முறையின் எட்டு துணைப் பிரிவுகளைக் குறிக்கிறது:

1. ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி
2. பொதுக் கல்வி
3. உயர் கல்வி
4. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி
5. பிரிவேனா கல்வி
6. விசேட மற்றும் உள்ளடக்கிய கல்வி
7. முறைசாரா கல்வி
8. சர்வதேச பாடசாலைக் கல்வி

ஒவ்வொரு மீளாய்வுக் குழுவும் மூன்று விடய-விசேட ஆலோசகர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு ஆலோசகர் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இறுதி மதிப்பாய்வு அறிக்கையைத் தொகுப்பதற்குப் பொறுப்பான தலைமை நிபுணராகச் செயல்பட வேண்டும்.

---

**வேண்டப்படுகின்ற தகைமைகள் மற்றும் அனுபவம்:**

1. தொடர்புடைய கல்வித் துறையில் குறைந்தபட்சம் **10 ஆண்டுகள் தேசிய அல்லது சர்வதேச அனுபவம்.**
2. முன்னுரிமையாக, விண்ணப்பதாரர்கள் **பல்கலைக்கழகங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட கல்விசார்** நிபுணர்களாக இருக்க வேண்டும்.
3. கல்விக் கொள்கை உருவாக்கம் மற்றும் நிறுவன அல்லது துறைசார் அறிக்கைகளைத் தொகுப்பதில் ஊக்கமான பங்கேற்றதற்கான பதிவுகளைக் கொண்ட நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

---

**நிபந்தனைகள்:**

- விண்ணப்பதாரர்கள் தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு - 2020–2030 இன் மூல உருவாக்கக் குழுவில் ஒரு பகுதியாக இருந்திருக்கக்கூடாது.

**குறிப்பு:** மீளாய்வுப் பணியை வெற்றிகரமாக முடித்தவுடன் கௌரவ ஊதியம் ஒன்று வழங்கப்படும்.

---

**விண்ணப்ப அறிவுறுத்தல்கள்:**
ஆர்வமுள்ள நபர்கள் சுயமாகத் தயாரித்த சுயவிபரக் கோவையை மின்னஞ்சல், தொலைநகல் அல்லது தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்:


**செயலாளர்**
தேசிய கல்வி ஆணைக்குழு
பிளாக் 05, பண்டாரநாயக ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,
கொழும்பு

மின்னஞ்சல்: secnec@slt.lk
தொலைபேசி/தொலைநகல்: 011-2662064
இணையத்தளம்: www.nec.gov.lk


காலக்கெடு: விண்ணப்பங்களை 2025 ஆவணி 24, அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

"**மதிப்பாய்வுக்கான ஆலோசகர்கள் – தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2020–2030) – [தேர்ந்தெடுக்கப்பட்ட துறை**] என்பது

கடித உறையின் தலைப்பு வரி அல்லது மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்:

தலைவர்
தேசிய கல்வி ஆணைக்குழு
2025 ஆவணி 03